பதிவு எண்: M. 6511 ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 14 (29—7—68) திங்கள் ★ வெளியூர்: ஆடி 15 (30—7—68) செவ்வாய் [இதழ்: 38

கோதுமை அளவு உயருகிறது

சென்னை, சூலை 28—

கோதுமை கையிருப்பு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து ரேஷன்கார்டு வைத்திருப்போருக்கு கோதுமை அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது.

"ஒரு கார்டுக்கு 5 கிலோகிராம் வரை கோதுமை கிடைக்கும்" என்று, சிவில் சப்ளை ஆணையர் திரு. கே. திரவியம் அறிவித்துள்ளார்.

இந்த அளவு உயர்வு 4—8—68 முதல் செயலுக்கு வருகிறது.

11 நீதிபதிகள் கூடி ஆராய்கின்றனர்

தலைமை நீதிமன்றத்தில் 'தடுப்புக் காவல் சட்டம்'

பாதிக்கப்பட்ட குடிமகனின் வழக்கில் நடவடிக்கை

புதுடில்லி, சூலை 28—

குடிமகன் ஒருவனின் உரிமையை, தடுப்புக் காவல் சட்டம் எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதை ஆராய்வதற்கு, தலைமை நீதிமன்றத்தின் 11 நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

சம்பத் பிரகாஷ் என்னும் ஜம்மு-காஷ்மீர் அரசு ஊழியர் ஒருவர், தடுப்புக்காவல் சட்டத்தின்படி மார்ச் 16-ம் நாள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

தாம் சட்டவிரோதமாகக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும், இது குறித்து விசாரித்து நீதி வழங்குமாறும் கோரித் தலைமை நீதிமன்றத்தில் அவர், 'ஹேபியஸ் கார்பஸ்' மனுத் தாக்கல் செய்திருந்தார்.

1950-ல், கம்யூனிஸ்டுத் தலைவர் ஏ. கே. கோபாலனின் வழக்கு ஒன்று சமபந்தமாகத் தலைமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மறு பரிசீலனை செய்து, இவ் வழக்கில் தீர்ப்பளிக்க வேண்டுமென மேற்படி ஊழியரின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் கோரியிருந்தார்.

இது தொடர்பாகவே, இவ் வழக்கை 11 நீதிபதிகளின் குழு விசாரணைக்குத் தலைமை நீதிபதி ஹிதயதுல்லா அனுப்பியுள்ளார்.

ஆகஸ்டு 19-ம் நாள் இந்த விசாரணை நடைபெறவிருக்கிறது.

பணியாற்றாமலே பணம் பெற்றனர்!

பத்ராசலம், சூலை 28—

ரூ. 1-இலத்திற்குமேல் ஊதியம் பெற்றுக்கொண்டு சென்ற ஆண்டு முழுவதும் பணியாற்றாமலே இருந்ததாக நிர்வாகப் பொறியர் ஒருவர்—துணைப் பொறியர் ஒருவர்—சூப்பர்வைசர் ஒருவர், பத்ராசலம் சாலைப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ளனர்.

பர்மா -- இலங்கை அகதிகளுக்கு உதவி

புதுடில்லி, சூலை 29—

பர்மா, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டுத் திரும்புவோரில், தேவைப்படுவோருக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க மத்திய அரசு, பல்வேறு மாநில அரசுகளுக்கு ரூ 14,000 அளித்திருக்கிறது.

இதில் தமிழக அரசுக்கு ரூ. 5,000; மேற்கு வங்கம், ஒரிசா, உத்தரப் பிரதேசம் ஆகியவற்றுக்குத் தலா ரூ. 2 000; கேரளத்துக்கு ரூ. 1 000; இராஜஸ்தான், அரியானா பஞ்சாப், மததியப் பிரதேசம் ஆகியவற்றுக்குத் தலா ரூ. 500 கிடைத்திருக்கிறது.

டெல்லியில் இருட்டடிப்பு!

புதுடில்லி, சூலை 29—

டில்லியில் நேற்றிரவு ஒரு மணி நேரத்திற்கு இருட்டடிப்பு ஒத்திகை நடைபெற்றது.

விமான நிலையம், இரயில் நிலையங்கள் ஆகிவவற்றில் அலுவல்கள் நின்றன; போக்குவரத்து 10 நிமிட நேரம் நின்றது; சங்கு ஒலித்தவுடன் மக்கள் வீடுகளுக்குள்ளும் புகுந்துகொண்டனர். 40 மைல் சுற்றளவுக்கு ஒரே இருளாக இருந்தது.

விமானப்படை விமானமொன்று போலிக்குண்டுகளை வீசியது ஆயிரக்கணக்கான சிவில் பாதுகாப்புத் தொண்டர்கள் தீயை அனைத்தனர்.

10 பகுதிகளில் ஒத்திகைகள் நடைபெற்றன.

செக்கோஸ்லோவேகியா மீது இரஷ்யா படையெடுக்கும்?

அடங்கி நடக்க மறுப்பதால் ஏற்பட்ட சீற்றம்

'கொள்கையில் மாற்றம் செய்வது கம்யூனிசத்துக்கு ஆபத்து' என எச்சரிக்கை

மாஸ்கோ, சூலை 27—

இரஷ்யாவின் விருப்பத்துக்கு மாறாக, தங்கள் நாட்டுக் கொள்கைகளில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்துள்ள செக்கோஸ்லோவேகியாவை, இரஷ்யா கடுமையான முறையில் எச்சரித்திருக்கிறது.

செக்கோஸ்லோவேகியா பிரச்சினையில் இன்னும் பொறுமை காட்டுவதில் பயனில்லை என்றும், அதற்கான காலம் கடந்துவிட்டதாகவும், எனவே, எந்த நேரத்திலும் தயாராக இருக்குமாறும் தனது படைகளுக்கு இரஷ்யா உத்தரவிட்டிருக்கிறது.

இரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகையான 'பிராவ்தா', செக்கோஸ்லோவேகியாவில் கம்யூனிசத்துக்கு ஆபத்து மேலும் அதிகமாகிக்கொண்டு வருவதாகவும், காலம் காத்திருக்காது என்றும் கம்யூனிசக் கொள்கைகளுக்காக இரஷ்யாவும், கூட்டு நாடுகளும் உறுதியுடன் செயல்படவிருப்பதாகவும் எச்சரித்திருக்கிறது.

இந்த எச்சரிக்கை, 'செக் தலைவர்கள் இரஷ்யாவுக்குக் கட்டுப்படாமல் மேற்கொண்டும் தங்கள் போக்கில் செயல்படுவார்களானால், இராணுவ நடவடிக்கையில் இரஷ்யா இறங்கக்கூடும் என்பதற்கான சூசகமாகும்' என்றே கருதப்படுகிறது.

இரஷ்யப் படைகளின் அணிவகுப்பு ஒத்திகை

'செக்கோஸ்லோவேகியாவில் கம்யூனிஸ்டு எதிர்ப்புப் புரட்சி ஏற்படக்கூடும்' என இரஷ்ய மக்களிடம் கூறப்படடுவரும் அதே நேரத்தில், இரஷ்யாவின் மேற்கு எல்லையில் இரஷ்யப் படைகளின் அணிவகுப்பு ஒத்திகை முப்முரமாக நடைபெற்றுவருகிறது.

ஆகஸ்டு 10-ம் நாள்வரையில் இந்த ஒத்திகை நடைபெறுமென்றும், 'ரிசர்வ்' படையினரும் அழைக்கப்பட்டிருக்கின்றனரென்றும், செக் நாட்டின் எல்லையொட்டிய பகுதியிலேயே இந்த ஒத்திகைகள் நடப்பதாகவும் 'ரெட ஸ்டார்' எனும் இரஷ்ய இராணுவ இதழ் கூறியிருக்கிறது.

விமானப் பாதுகாப்பு ஒத்திகையும் ஆரம்பமாகிவிட்டதாகவும், இதில் ராக்கெட் படைகளும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதே இதழ் கூறியிருக்கிறது.

யாரை அச்சுறுத்த?

"இந்த இரு ஒத்திகைகளும் செக்கோஸ்லோவேகியாவை அச்சுறுத்துவதற்காகத்தான்" என்று கருதப்படுகிறது.

"செக் நாட்டில் இப்போது நடைபெறும் சம்பவங்கள், 1956-ல் அங்கேரியில் நடைபெற்றதைப் போன்று உள்ளன" என்று அங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடு எழுதியிருக்கிறதாம்.

மொரார்ஜி வருகையையொட்டி அடக்குமுறை தாண்டவம்!

மக்கள் கூட்டத்தின்மீது போலீசுதடியடி தர்பார்

காந்தியார் அகிம்சையைப் போதித்த மண்ணில் வன்செயல் --- அமளி!

வார்தா, சூலை 28—

'உலக உத்தமர்' என்றும், 'நாட்டின் தந்தை' என்றும் போற்றப்பட்ட காந்தியடிகள் எந்த இடத்தில் இருந்துகொண்டு தம் வாழ்நாள் முழுவதும் அகிம்சைக் கோட்பாட்டைப் போதித்தாரோ --- அதே இடத்தில், இன்று காலை போலீசார் வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்; பொதுமக்களைப் போலீசுத் தடிகள் இருமுறை பதம் பார்த்தன!

இந்தியத் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் இந்த ஊருக்கு வந்ததையொட்டியே வன்செயல்கள் தலைதூக்கின.

காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடுகளையொட்டி நடைபெற்ற ஒரு மாநாட்டைத் துவக்கி வைக்க மொரார்ஜி தேசாய் இங்கு வந்தார்; அப்போது, ஆயிரத்துக்கு மேற்பட்டோர் போலீசு வளையத்தையும் மீறி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கல்வீச்சுக் காரணமாக மொரார்ஜியின் கார் சேதமடைந்தது; மற்றும் சில கார்களின் கண்ணாடிகளும் உடைந்தன.

கல்வீச்சுக் காரணமாக 8 போலீசுக்காரர்கள் உட்பட 20 பேர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

சில மாணவர்கள் உட்பட 24 பேரைப் போலீசார் கைது செய்து வைத்திருந்து பின்னர் விடுவித்தனர்.

தேசாய் வந்த காரைச் சூழ்ந்துகொண்ட கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் தடியடி செய்தனர்.

இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் வார்தாசாலையிலும், சேவாகிராமச்சாலையிலும் போலீசாரின் கட்டுப்பாட்டையும் மீறி முழக்கமிட்டுக்கொண்டு வந்தனர்.

தடியடியால் காயமடைந்த 18 பேரில் 4 மாணவர்களும் உள்ளனர்; அவர்கள், போலீசு ஜீப்பில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

"வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை ரகூரியில் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, வார்தா பகுதியில் ஏற்படுத்தவேண்டும்" என்ற கோரிக்கையை வற்புறுத்துவதற்காக மாணவர்கள், அமராவதியிலிருந்தும் நாகப்பூரிலிருந்தும் வந்து சேர்ந்து அதிகாலையிலிருந்தே கோரிக்கை முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தனர்.

மூன்று மணி நேரத்துக்கு மேல் அந்த மாணவர்கள் கோரிக்கையை முழங்கிக்கொண்டே, மொரார்ஜி வரும்வழியில் காத்துக்கொண்டிருந்தனர்.

மொரார்ஜி வந்து சேர்ந்ததும் அவர்கள் போலீசாரின் கட்டுப்பாட்டையும் மீறி வந்தபோது, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

சேவாகிராம சாலையை மொரார்ஜி தேசாய் கடக்கும் போதும் கூட்டத்தின்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததை யடுத்து ஆத்திரமடைந்த மாணவர்கள், கல்லெறியில் ஈடுபட்டனர். வழியில் வரும் கார்கள் மீதெல்லாம் கல்லெறிந்தனர்.

நிலைமை மிகவும் மோசமாகக் கூடும் என்று, தெரிந்ததும் போலீசார், கடுமையாக அடக்குமுறையைக் கையாண்டனர். அந்த வழியே வருவோர் போவோரையெல்லாம் அடித்துத் துரத்த ஆரம்பித்தனர்.

போலீஸ் தடிக்கு யாரும் தப்பவில்லை. இத்தனையும் ஒரு பத்து நிமிடத்திற்குள் நடந்தன.

கைதான 80 பேர்களில் இரு சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்தனர்.

அமராவதியில் போலீசார் கைது செய்த 22 பேர்களில் ஒரு கல்லூரிப் பேராசிரியரும், ஒரு நகராட்சி உறுப்பினரும் இருந்தனர்.

தடை யுத்தரவு

மதுரை, சூலை 28—

முன்அனுமதியின்றி மதுரை நகரில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடை விதித்து உத்தரவு ஒன்றைப் போலீசு அதிகாரி பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவு, 10 நாட்களுக்கு அமுலில் இருக்கும்.

குற்றங்கள் பெருக்கம்

கல்கத்தா, சூலை 28 —

"குடியரசுத் தலைவர் ஆட்சி நடக்கும் மேற்கு வங்கத்தில், கொலை — கொள்ளை உட்படக் குற்றங்கள் பெருகிவிட்டன"

என்று, பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த ஹேமந்த குமார் போஸ், மேற்கு வங்க ஐக்கிய முன்னணித் தேர்தல் பிரசாரத் துவக்க விழாவில் பேசுகையில் குற்றஞ்சாட்டினார்.

நூலை வாங்கி இருப்பில் வைத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் திட்டம்

தமிழகத்தில் விரைவில் அமுலாகும்

அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, சூலை 28—

"தமிழகத்தில் மிகவும் நெருக்கடியான நிலையிலுள்ள பஞ்சாலைகளுக்கு உதலியளிக்கும்வகையில், கணிசமான நூலை அரசே விலைக்கு வாங்கி இருப்பில் வைத்துக்கொண்டு, மார்க்கெட் நிலவரம் சீரானபிறகு நூலை விடுவிக்கும் திட்டத்தை அமுலாக்குவதுபற்றி மததிய அரசு பரிசீலனை செய்துவருகிறது; நீண்ட நாட்களுக்குமுன்னரே வந்திருக்கவேண்டிய இந்தத் திட்டம், விரைவில் அமுலுக்கு வரும்"

என்று கைத்தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிததிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"இதற்கென உருவாக்கப்பட்டுள்ள திட்டத்தை இந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கம்—தமிழ்நாடு ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கம் ஆகியவைமூலம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்படி, 32,000 நூல் கட்டுக்களைத் தற்போதைய மார்க்கெட் விலையில் 90-சதவிகிதத்திற்கு விலைக்கு வாங்கி இந்திய அரசு இருப்பில் வைத்துக் கொள்ளும்; சுமார் மூன்று மாதங்களில்—மார்க்கெட் நிலவரம் சீரான பிறகு விடுவிக்கும்.

மத்திய அரசு ரூ. 1-கோடி அளிக்கும் உத்தரவாதத்தைக் கொண்டு அரசாங்க பாங்கியிலிருந்து மொத்தம் ரூ. 5-கோடி கடன் எழுப்பப்படும்; அந்தப் பணத்தைக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

1968 சூலை திங்களில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், மத்திய வர்த்தக அமைச்சரைச் சந்தித்து, இந்தத் திட்டத்தை விரைவில் அமுலாக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் இந்திய அரசுக்கு ஏற்படும் நட்டத்தில் பாதியை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தமிழக அரசு இறங்கியிருக்கிறது."

அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் கூறியிருப்பதாவது :—

"நிதி தேவைப்படும் பஞ்சாலைகளுக்கு உத்தரவாத உதவியை விரிவுபடுத்துவது பற்றித் தமிழக அரசு பரிசீலனை செய்துவருகிறது; இதுவரையில், 19 பஞ்சாலைகட்கு இந்த உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

உதவியின் மொத்த அளவு ரூ. 166.27 இலட்சமாகும்; இதில், உத்தரவாத நிதி உதவியான ரூ. 85 22 இலட்சத்தை இதுவரையில் 9 பஞ்சாலைகள் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன.

பஞ்சாலைத் தொழிலை நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்துடன் தமிழக அரசு மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறது. ஊழியர்கள், நிர்வாகிகள் ஆகிய இரு சாராரின் துன்பங்களைக் களைய வேண்டும் என்பதே தமிழக அரசின் ஆவலாகும். மூடப்பட்ட ஆலைகள் பற்றித் தமிழக அரசு தனிக் கவனத்துடன் பரிசீலனை செய்து வருகிறது."

'நிலைமை மாறினாலன்றி இயலாது'

'சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்குவது மக்களுக்குத் தொல்லையை விளைவிக்கும்'

'உற்பத்தி பெருகும்வரையில் யோசிப்பதற்கில்லை'—அமைச்சர் கே. ஏ. மதியழகன் திட்டவட்ட அறிவிப்பு

சென்னை, சூலை 28—

"இன்றையச் சூழ்நிலையில் சர்க்கரைக் கட்டுப்பாடுகளை அடியோடு நீக்கிவிடுவதைத் தமிழக அரசு எதிர்த்தே தீரும். பகிரங்க மார்க்கெட்டுகளில் விலை குறையும் அளவுக்குச் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் இப்போது காணப்படவில்லை; இந்த நிலைமையில், கட்டுப்பாடுகளை அடியோடு எடுத்துவிட்டால், பொதுமக்களின் தேவையில் ஒரு பகுதியாவது கிலோ ரூ 1.75 விலைக்குக் கிடைக்க முடியாமற் போய்விடும்; எனவே, நிலைமை முழுவதும் மாறினாலன்றி, முழுக்கட்டுப்பாடு நீக்கத்துக்குத் தமிழக அரசு இணங்கும் நிலைமையில் இல்லை"

எனறு உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், தெளிவாகக் கூறினார். அவர் மேலும் அதுபற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது :—

"சர்க்கரைக் கட்டுப்பாட்டை ஓரளவுக்கு நீக்குவதைக்கூடத் தமிழக அரசு எதிர்த்தது; மக்களுக்குத் தேவைப்படும் சர்க்கரை முழுவதும் நியாய விலைக்குக் கிடைக்காமற்போய்விடும் என்ற அச்சமே அதற்குக் காரணமாகும்.

"கிலோ ரூ. 1.75 விலையில் சர்க்கரை வழங்க முடியும்—உற்பத்தி செய்ய இயலும்—என்ற நிச்சயம் இல்லாத நிலைமையில், கட்டுப்பாடுகளை முழுவதும் நீக்கி விடுவதுபற்றி யோசிப்பதில் அர்த்தம் ஏதுமில்லை; அதனால், பொதுமக்களுக்குத் தொல்லை தான் ஏற்படும்."

'தொழிலாளர்களின் நியாயமான குறைகளைக் களைந்தெறிய அரசு நிச்சயம் முயலும்'

'பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தே முடிவெடுக்கும்'

அமைச்சர் செ. மாதவன் தெளிவுரை

சென்னை, சூலை 28—

"'தேசியமயமாக்கும் திட்டம் கேடு விளைவிக்கும்' என்று சிலர் தவறாகப் பிரசாரம் செய்துவருவது வருந்தத்தக்கதாகும்; தேசியமயமாக்கும் கொள்கையைத் தொழிலாளர் நிறுவனங்கள் ஆதரித்து அரசின் கையைப் பலப்படுத்த வேண்டும்.

"தொழிலாளர்களின் குறைகள் உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருந்தால், அவைகளைக் களைந்தெறிய மாநில அரசு நிச்சயம் முயலும்.

"எந்தப் பிரச்சினைகளைப் பற்றியும் தொழிலாளர் தலைவர்களுடன் விவாதிப்பதற்கும், அவர்களுடைய யோசனைகளையும் கேட்பதற்கும் தயாராக இருக்கிறேன்; என்னால் செய்யக் கூடியவை—செய்ய முடியாதவை ஆகிய இரண்டையும் தொழிலாளர் தலைவர்கட்குத் தெரிவிப்பேன்"

என்று, தொழிலாளர் உறவுத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், ஆயுள் காப்பீட்டுக் கழக உயர்நிலை உதவியாளர்கள் இரண்டாவது அனைத்திந்திய மாநாட்டின் இரண்டாம் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்.

தமிழக அரசு எதிர்க்கும்

"கணக்குப் போடும் இயந்திரங்களையும், மனிதர்கள் செய்யும் பணியைச் செய்வதற்குத் தாமாக இயங்கும் இயந்திரச் சாதனங்களையும் பயன்படுத்தும் கொள்கையைத் தமிழக அரசு எதிர்க்கும்"

என்றும் அமைச்சர் மாதவன் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"உற்பத்தி சம்பந்தமான துறைகளில் விஞ்ஞானச் சாதனங்களைப் பயனபடுத்தக் கூடாது என்று நாங்கள் கூறவில்லை. எழுத்தர்களின் பணியையும் செய்வதற்கும்கூடத் தாமே இயங்கும் இயந்திரச் சாதனங்களை—மனிதரை விழுங்கும் இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

ஏற்றுநடத்தும் திட்டத்தை அரசு கைவிட்டதேன்?

இன்ஷ்யூரன்சுத் தொழிலின் சில பிரிவுகளை ஏற்று நடத்தத் தமிழக அரசு எண்ணியிருந்தது; இதுபற்றி வேறு மாநில அரசுகளுடனும், மத்திய அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது; எல் ஐ.சி. நடத்தும் இன்ஷ்யூரன்சுத் தொழில்களை ஏற்று நடத்த மத்திய அரசு எண்ணியிருப்பதாகத் தெரியவந்தது: அதன் விளைவாகத் தமிழக அரசு, தன்னுடைய எண்ணத்தைக் கைவிட்டுவிட்டது."

வாரத்துக்கு ஒருமுறை மாற்றப்பட்ட விசித்திரம்

லக்னோ, சூலை 28—

உத்தரப்பிரதேசத்தில் ஓராண்டில் நான்கு இலட்சம் ஆசிரியர்கள், ஓரிடத்திலிருந்து வேறிடத்துக்கு மாற்றப்பட்டனராம்!

ஆசிரியர் ஒருவர் ஓராண்டில் 48 தடவை — வாரத்துக்கு ஒரு முறை—மாற்றப்பட்டாராம்!

வாங்கிய கரும்புக்குப் பணம் தராத ஆலைகள்

மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாம்

பொறுப்பை தட்டிக்கழிக்கிறது மத்திய அரசு

புதுடில்லி, சூலை 28—

கரும்பு உற்பத்தியாளருக்கு—அவர்களிடம் வாங்கப்பட்ட கரும்புக்கு ஒழுங்காகப் பணம் கொடுக்காத சர்க்கரை ஆலை அதிபர்கள் மீது வழக்குத் தொடுப்பது உட்பட கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

1967—68-ல், நாடு முழுமையிலும் உள்ள சர்க்கரை ஆலைகளால், கரும்பு உற்பத்தியாளரிடம் வாங்கப்பட்ட கரும்பின் மதிப்பு ரூ. 182.94 கோடியாகும். இத்தொகையில் 1968 சூன்வரை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி ரூ. 8.26 கோடியாகும்.

தமிழக ஆலைகள் இந்த ஆண்டில் ரூ. 12.49 கோடிக்கு கரும்பு வாங்கியிருக்கின்றன. இதில், உற்பத்தியாளருக்குத் தரவேண்டிய பாக்கி ரூ. 25 48 இலட்சமே ஆகும்.

1967—68-ல் அதிகபட்ச அளவுக்குக் கரும்பு வாங்கியிருப்பது உத்தரப் பிரதேசமாகும். ரூ. 70.56 கோடி மதிப்புடைய இத்தொகையில் பாக்கித் தரப்படவேண்டியது ரூ. 2.41 கோடியாகும்.

ரூ. 45.46 கோடிக்கு கரும்பு வாங்கிய மாராட்டிரம், ரூ. 3.47 கோடி பாக்கி வைத்திருக்கிறது.

பிகார் ரூ. 17.51 கோடிக்கு கரும்பு வாங்கியிருப்பதில், ரூ. 4 8 கோடி பாக்கி வைத்திருக்கிறது.

சென்னை மாநகராட்சி அரும் பணி

இலவச மதிய உணவுத் திட்டம் விரிவாகிறது

பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் மேலும் 15,000 பேர் பயனடைவர்—ரூ. 5 இலட்சம் கூடுதல் செலவு

சென்னை, சூலை 28—

"சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மேலும் 15,000 மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது; இவர்களுடன் சேர்த்தால், இலவச மத்திய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50,000 ஆக இருக்கும்; இதற்குக் கூடுதலாக ரூ. 5 இலட்சம் செலவாகும்"

என்று, மாநகராட்சியின் தற்காலிக ஆணையாளர் எப். ஜே. வாஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"இப்போது முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்கும் 35,000 மாணவர்களுக்கு ரூ. 10 இலட்சம் செலவில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மொத்தம் 342 மாநகராட்சித் துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன; இதில் 210 பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றன; இதர பள்ளிகளுக்கு வாடகை தரும் வகையில் ரூ. 16,800 செலவாகி வருகிறது."

முந்திய அரசு பின்பற்றிய கொள்கையே காரணம்

தமிழகப் பஞ்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைப் பற்றிக் கூறுகையில் அமைச்சர் விளக்கியதாவது:—

"இந்த நெருக்கடிக்குக் காரணம், சென்ற 20 ஆண்டுகளாக முந்திய அரசு பஞ்சாலைகள் பிரச்சினையில் பின்பற்றிய கொள்கை தான்.

ஆலைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது; இந்த யோசனையை எவ்வாறு செயல்படுத்துவது—இதற்குப் பண வசதியை எவ்வாறு பெறுவது என்பதையும் தெரிவிக்க வேண்டும்; அப்படிச் செய்தால், 'பஞ்சாலைகளை அரசு ஏற்று நடத்தவேண்டும்' என்ற யோசனையைப் பரிசீலனை செய்ய இயலும்."

'உன்னிப்புடன் கவனிக்கிறோம்'

'அவசியமானால் நடவடிக்கை'

அமைச்சர் மதியழகன் தரும் விளக்கம்

சென்னை, சூலை 28—

"ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; 'விலைகளைக் குறைக்க வேண்டும்' என்ற வேண்டுகோளை எல்லா ஓட்டல்களும் ஏற்கும்படிச் செய்வதற்கு, அவசியமானால், நடவடிக்கைகள் எடுக்கவும் போகிறோம்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஓட்டல்களில் இன்னும் உணவுப் பண்டங்களின் விலைகள், மன நிறைவு பெறும் அளவுக்குக் குறைக்கப்படவில்லை.

"பருப்பு, எண்ணெய், மற்றும் இதர உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்துள்ளன; 'அரிசி கிடைக்கவில்லை' என்ற பேச்சுக்கே இடமில்லை; எனவே, ஓட்டல்களில் மேலும் விலைகளைக் குறைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. 'விலைகளைக் குறைக்க வேண்டும்' என்பதுதான் தமிழக அரசின் கருத்தாகும்."

மக்கட் தொகை குறைவது பற்றி இரஷ்யாவின் கவலை

குழந்தைகள் பிறப்பை ஊக்குவிக்க குடும்பங்களுக்குச் சிறப்புப் 'படி'!

மாஸ்கோ, ஜூலை 29—

இந்தியாவில், 'மக்கட் தொகை பெருகுவதைக் கட்டுப்படுத்துவது எப்படி ?' என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இரஷ்யாவிலோ, இதற்கு நேர்மாறான கவலை ஏற்பட்டுள்ளது; 'மக்கள் தொகையைப் பெருக்க என்ன செய்வது என்ற கவலைப் பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் பிறப்பு விகிதம் குறைவதும், உடல் தளர்ச்சியும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதும் இரஷ்யாவைக் கவலையடையச் செய்திருக்கிறது.

தனது தொழிலாளர் சக்திக்கும், 'மேற்கு நாடுகளை மீறவேண்டும்' என்ற குறிக்கோளின் சாதனைக்கும் இது அச்சமூட்டலாகும் என அஞ்சப்படுகிறது.

இங்கிலேமை நீடித்துக்கொண்டே போகுமானால், 1870-ல் சோவியத் இரஷ்யாவின் 23.8 கோடி மக்கட்தொகை குறையக்கூடும் என்று புள்ளிவிர நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த நிலேமையில் அச்சம் தெரிவித்து பத்திரிகைகள் எழுதுகின்றன.

அதிக மக்கட் பேற்றைத் தூண்டுவதையில் குடும்பப் 'படி' தரவும் திட்டமிடப்படுகிறது.

வயதானவர்கள் மீண்டும் வேலே செய்யத் தூண்டுதிட்டங்களும் உருவாகப்படுகின்றன.

ஒய்வுபெறும் வயதுவரம்பு குறைவாக இருப்பதாலும், நீண்ட கால வாழ்வு எதிர்பார்க்கப் படுவதாலும், ஒய்வுகால ஊதியம் பெறுவோர் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே யிருக்கிறது.

சூலுவலகங்களிலும், தொழிற் சலேகளிலும் பெண்கள் பணி யாற்றச் செல்வதும், சிருக்கு மியான வாழ்க்கை முறைகளும், குழந்தை பிறப்புக் குறைவதற்குக் காரணங்களாகக் கூறப் படுகின்றன.

பெரும் பான்மையான சோவியத் குடும்பங்கள், ஒன்றோ இரண்டோ குழந்தைகளைக் கொண்டதாகவே இருக்கின்றன.

அலுவலகங்களில் பணியாற்றும் பெண்கள், இந்த அளவுக்குக் கூடக் குழந்தைகளைக் கவனிப்பதைத் தங்களுக்குத் தொல்லை யாகவே சருதுகின்றனர்; வீட்டு வசதிக் குறைவும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

முதியவர்கள் உட்பட ஒரு பெரிய குடும்பமே ஒரே அறையில் அடைபட்டுக் கிடப்பது இன்றும் இரஷ்யாவில் சாதாரணமாகக் காணக்கூடியதாகும்.

பெரிய நகரங்களில், சருச் சிதைவு மூலம் குழந்தைப் பிறப்பதையே இல்லாமல் செய்யப் பட்டுவிட்டிருக்கிறது.

இது, உழைப்பதற்கு முன்வரும் இளேஞர்களின் எண்ணிக்கை யைக் குறைக்கக்கூடும். அதே நேரத்தில், சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் உழைக்கும் சக்தியடைத்த நபர்கள், வெளி யேறிக் கொண்டும் வருகின் றனர்.

இப்போழுது ஆண்கள் ஒய்வு பெறும் வயது 60-ஆகவும், பெண்கள் ஒய்வுபெறும் வயது 55-ஆகவும் இருக்கிறது.

கருச் சிதைவுக்குச் சட்ட ஒப்புதல்!

மசேதா உருவாகிவிட்டதாக அமைச்சர் தகவல்

திருவனந்தபுரம், ஜூலை 27—

"கருச் சிதைவைச் சட்ட சம்மத மாக்குவதற்குப் பதில் தாராள மாக்குவதற்கு மத்திய அரசின் சுகாதார -- குடும்பக் கட்டுப் பாடு அமைச்சகம், மசோதா ஒன்றைத் தயாரித்திருக்கிறது; அரசின் ஒப்புதல் பெற்றபிறகு அம்மசோதா, நாடாளுமன்றத் தின் அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்."

இந்தத் தகவலே, சுகாதார அமைச்சகத்தின் செயலாளர் கோவிந்தராராயண் நிருபர்களிடம் கூறினர்; அவர் மேலும் குறிப் பிட்டதாவது:—

"கருச் சிதைவை அனுமதிப்ப தற்குமுன்பு கணவனே அல்லது மனேவியோ மலடாக்கப்படுவதற் கான சிகிச்சையைச் செய்து கொள்ள இணங்கவேண்டும்; அப் படியாலுலதான், மேற்கொண்டு கருச் சிதைவுகளுக்கு அலேயும் இருக்காது; அத்துடன், கருத் தரித்த 12-வாரங்களுவரதான கருச் சிதைவு அனுமதிக்கப்படும்; தகுதியாய்ந்த ஒரு டாக்டர் கொடுக் கும் சுகசான்றினமீதுதான் கருச் சிதைவு செய்யலாம்.

திருமணம் செய்துகொள்ள குறைந்தபட்ச வயது

நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 40-இலட்சம் கருச் சிதைவுகள் நடைபெறுகின்றன.

திருமணம் செய்துகொள்வதற் கான குறைந்தபட்ச வயதைப் பெண்களுக்கு 18-ஆகவும், ஆண் களுக்கு 21-ஆகவும் உயர்த்துவ தற்கு ஒரு மசோதாவைக் கொண்டுவருவது பற்றி அரசு ஆலோசனே செய்துவருகிறது."

அந்தியூரில் குழந்தைகள் பள்ளித் திறப்பு

கிறித்துவப் பாதிரிமார்களின் பணிகளுக்குப் பாராட்டு

அந்தியூரில் 10—7—68 காலே 10 மணிக்கு நிர்மலா நர்சரி பள்ளி யின் துவக்கவிழா, சட்டமன்ற உறுப்பினர் ர. எம். நடராசன் தலேமையில் நடைபெற்றது.

அந்தியூர் ஜோர்ட்சி ஒன்றிய ஆணேயர் டி. கே. வெங்கடாசலம் தேசிய கொடியை ஏற்றுவித்தார்; சங்கை-சகோதரி போஸ்கோ அனேவரையும் வரவேற்றார்.

தலேவர் ர. எம். நடராசன், அந்தியூரில் இதுபோன்ற நர்சரி பள்ளி துவக்கிவைப்பது நமக்குக் கிடைத்த பெருமேபோல என்னும் இது நல்ல முறையில் நடைபெற அனேவரும் ஒத்துழைக்க வேண்டு மென்றும் கூறி, இப்பள்ளிக்கு இந்த நர மக்கள் தங்களுடைய குழந் தைகளே அனுப்பிமைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அந்தியூர் நர்சரிப் ஒன்றிபத் தலேவர் கே. கே. சுபேரமணியம் காந்தியார் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கிறித்துவ பாதிரிமார்கள் கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும் நம் நாட் டில் செய்யும் அரிய பணிகளப் பாராட்டியதுடன், இதுபோன்ற நர்சரி பள்ளியை நடத்துவதற்கு ஊக்கமித்த மலேதகிரி ரோஜஸ் லால் அடிகளாருக்கும், பள்ளி நிர் வாகத்தினருக்கும் ஈன்றி தெரிவித் துக்கொண்டார்; தவு டுப்பாண் மை அரிசனக் காலனியிலும் தவு-டுப்பாணியதிலும இரண்டு குழந்தைகள் காப்பகம் ஜார்ட்சி ஒன்றியத்தின் மூலம் துவக்க இருப் பதனேயும் சுட்டிக்காட்டினார்.

அந்தியூர் சரக பள்ளித் துணே ஆய்வாளர் எம். கிருஷ்ணசாமி நர்சரி பள்ளியை திறந்துவைத்துப் பேசுகையில், அதிகக் குழந்தை களேப் பள்ளிக்கு அனுப்புமாறு பெற்றோர்களைக் கேட்டுக்கொண் டார்.

நர்சரி பள்ளியின் நடைமுறை யைப் பற்றியும், இந்நடவடிக்கித் துவர்—முன்பம்பியர் என்ற வேறு பட்டினி பள்ளிக்கு அறுப்பு மாறும், பள்ளி நல்ல முறையில் நடைபெற தன்னல் ஆன உதவி யைச் செய்வதாகவும் குறிப்பிட் டார்.

பேருக்கு உரிமையாளரும் பெரு நிலக்கிழாருமான ஏ. எஸ். குப்பு சாமி, செல்லீசுவன்கோயில் தர்ம கர்த்தா டி. ஆர். முனிசாமி, அந்தி யூர் நகர தி. மு. க. கிளச செய லாளர் வெற்றிவேல் ஆகியோர் இப்பள்ளி நன்முறையில் வளர நகர மக்கள் தங்களாலான உதவி யையும் சேவையையும் செய்தல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

துவக்க விழாவின்போதே 30 குழந்தைகள் சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூர் நகரசத்தித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

கூர் நகராசத்தித் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம் 7—7—68-ல் 14-வது வட்டம் தி மு க அலுவலக தலேவர் ஏ. என். நடராசன் தலேமையில் நடைபெற்றது; கீழ்க்கண்டவர் கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக் கப்பட்டனர்:—

தலேவர்: கே. ஆர். நாராயணன்; துணேத் தலேவர்: என். பாண்டியன்; செயலாளர்: பி. முருகேசன்; துணேசெயலாளர்: மு. கருப்பு; பொருளாளர்: எம் பழனிச்சாமி; செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர்.

கலேக் குழு முகவரி

திருச்சி வள்ளுவர் கலேக் குழுவின் தரன்—மாலா நடத்தும் 'மதுரை அரசின் சாதனே' என்ற நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்ளுக:—

ஏ. கோவிந்தன், 4, கலலுக்காரத் தெரு, (மரக்கடை அருகில்) திருச்சி-8.

கல்கத்தாவில் அண்ணு மணிவிழா-மலர் வெளியீடு

வங்கத் தமிழர்சங்கத்தின் வேண்டுகோள்

கல்கத்தா அவுராவில் இயங்கி வரும் வங்கத் தமிழர் சங்கம், ஏழைத் தமிழச் சிறுவர்கட்கு இலவசத் தமிழத் தொடக்கப் பள்ளி நடத்திவருகின்றது.

இப்பள்ளிக்கு சொந்தக் கட்டி டம் கட்டி—அக்கட்டிடத்தில் உயர் கில்ப் பள்ளி வரை நடத்த விழு கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளேப் பெரும் விழாவாகச் சங்கம் கொண்டாடி வருகிறது.

இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணு அவர்களின் மணிவிழா வினே இந்திய வரலாறு கண்டிராத முறையில் பெருஞ் சிறப்பாக— உலக விழாவாகக் கல்கத்தாவில் கொண்டாடத் தீவிர ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

இந்த விழாவின்போது அனேத்து நாடுகள் (International) அடிப் படையில் அமையும் 'அண்ணு மணிவிழா மலர்' ஒன்று வெளியிடு கின்றனர்.

இம்மலரை மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் கருணாநிதி அவர் கள் வெளியிடுகிறார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் தலேமைதாங்குகிறார்கள்.

கல்கத்தாவில் செட்டம்பர் திங் களில் நடக்கவிருக்கும் இவ்விழா வில், இந்தியா முழுவதிலுமிருந்தும் அறிஞர்கள், அரசியல் தலேவர் கள், சுவிஞர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இம்மலருக்கு இந்தியாவிலிருந் தும் வெளிநாடுகளிலிருந்தும் அறி ஞர்கள்—கவிஞர்கள்—தலேவர்கள் ஆகியோர் அண்ணு அவர்களின் சிறப்புக் குறித்தக் கட்டுரைகள், கவிதைகள் எழுதுகின்றனர்.

சல்கத்தாவில் உள்ள அலுவ நருடனின் தூதுவராங்களின் அதி காரிகள் சிறப்பு அழைப்பின் பேரில் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்ற னர்.

மாணவர்களின் 'அண்ணு ஓவி யங்கள்' மலரில் இடம்பெறுகின் றன.

அண்ணு அவர்களின் உலகச் சுற்றுப்பயணம் முழுவதும் இம் மலரில் இடம் பெறுகின்றன.

இம்மலரிலே உருவாக்கும் பொருட்டு 45 பேர்கொண்ட கொண்ட குழு, அமைத்திருக்கிறது அடிப்படை யில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் அயல்நாடுகளி லும் உள்ள அறிஞர்கள்—கவிஞர் கள்—தலேவர்கள்—படைக்க கழ கங்கள்—ஆகியோருக்கு இம்மலர் வழங்கப்பட உள்ளது.

வணிக நிறுவனங்கள் அண்ணு அவர்கள் வாழ்த்தித் தங்கள் விளம்பரங்களே இம்மலரில் இடம் பெறச் செய்வதன் மூலம் விளம் பரம் கொடுத்த வணிக நிறுவனங் கள் உலகம் முழுவதிலும் விளம் பரம் ஆவதுடன், இலவசத் தமிழப் பளிக்கட்டிடம் ஒன்று கல்கத்தா வில் கட்டவும் உதவுவதாகும்.

சங்கம் பதினாறனதொரு நிறுவன மாகையால், மலரில் விளம்பர மாகவேர, பள்ளிக் கட்டிட நிதிக் னன்கொடையாகவே, பொருள் உதவி செய்பவர்களுக்கு, அத் தொகைக்கு வரிவிலக்கு உண்டு.

மற்ற விவரங்கட்கு, 'மலர்க் குழு அமைப்புச் செயலாளர் மா. செய குட்டுவன், 4, சிவன கோயில் தெரு புலியூர், சென்னே-21'—என்ற முக வரிக்கு உடன் தொடர்புகொள்ள லும்படியும்; மாணவர்கள், இச் சங்கம் கொண்டாடும் அண்ணு மணிவிழாவிலும், மலர் வெளி யீட்டு விழாவிலும், பள்ளிக் கட்டிட நிதி ஆகிய விவரங்கள் குறித்தும் தங்களின் பங்கு பற்றி மலர்க் குழு உறுப்பினர் -- மாணவர் தலேவர் இரா. சஞ்சுதனம் எம்.ஏ. அவர் களுடன் தொடர்புகொள்ளுப்படி யும்; பம்பாய், ஆந்தராபாத்திலி

அரிசி ஆலைகளே நவீனமாக்கத் திட்டம்

உரிமம் கோருவோருக்குப் புதிய நிபந்தனே

புதுடில்லி, ஜூலே 26—

"நாட்டினுள்ள அரிசி ஆலேகளே நவீனமயமாக்குவதற்காக நிபந் தனே ஒன்று விதிக்க மத்திய அரசு எண்ணியுள்ளது; அதன் படி, புதிய ஆலேகள் அமைக்க உரிமம் கோருவோரோ, பழைய உரிமங்களேப் புதுப்பிக்க விரும்பு வோரோ, தங்களுடைய ஆலே களில் நவீன கருவிகளேப் பயன் படுத்த ஒப்புக்கொள்ளவேண் டும்"

என்று மக்களவையில் உணவுத் துறை இணே அமைச்சர் ஏ. பி. ஷிண்டே கூறினர்.

1958-ஆம் ஆண்டைய அரிசி ஆலேத் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கான திருத்த மசோதா ஒன்றை முன்மொழிந்து பேசுகை யில் மேலும் அவர் குறிப்பிட்ட தாவது :—

"நாட்டில் 45 ஆயிரம்முதல் 50 ஆயிரம் வரையில் அரிசி ஆலே கள் இருக்கின்றன; இவற்றில் பெரும்பாலானவை, காலாவதி யான சருவிகளேப் பயன்படுத்து கின்றன. இவற்றில் கிடைக்கும் அரிசியின் அளவு மிகக் குறைவு, கணிசமான அளவு தானியம் வீணுகிவிடுகிறது; அதை விரயத் தைத் தடுப்பதற்காகவே இந்த மசோதா கொண்டுவரப்படு கிறது."

தொழிலாளர் --- ஆசிரியர்கட்குப் பாராட்டு

சென்னை, ஜூலே 23—

சென்னே கப்பற்கட நிறுவனத் தில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கு இங்கிய அரசு தொழிலா ளர் கலவித் திட்டத்தின்கீழ் சிறந்த முறையில் பயிற்சி அளித்துவந்த தொழிலாளர்—ஆசிரியர்கள இரகு பதி, மயகிருட்டினன் ஆகியவர் களேப் பாராட்டும் வகையில் மண் டல இயக்குநர் எல். வேதமுத்து தலேமையில், 'போர்ட்ட் டிரஸ்ட் மைாம இன்டியூட்'டில் நேசிர விருந்து ஒன்று நடைபெற்றது.

இந்த இரு ஆசிரியர்களின் திற மையைப் பாராட்டி கப்பற்கட நிறுவன நிர்வாக அதிகாரிகளும், தொழிற்சங்கத் தலேவர்களும் பேசி னர். தொடர்ந்து இவர்கள் தொழி லாளர்களுக்கு நல்லறிவு ஊட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண் டனர்.

இறுதியில் மண்டல இயக்குநர் இரு ஆசிரியர்களின் சேவையைப் பேரறிஞர் விந்தித்து அவர்களுக் குப் பயிற்சி பெற்ற தொழிலாளர் களின் சார்பாக இரண்டு கைக் கடிகாரங்கள் அன்பளிப்பாக அளிக்தார்.

இதேபோன்று நல்ல பணி யாற்றிவரும் சுவாமிநாதன், தட் சிணமூர்த்தி, குருசாமி ஆகிய மூன்று தொழிலாள—ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களேமோதிரம் அன்பளிப்பாக அளித்து வாழ்த் துரை கூறினர்.

திரு. அல்லதார் வரவேற்றார்; திரு. பாவன் நன்றி கூறினார்.

சென்னை 44-வது வட்ட திருவள்ளுவர் மன்றம்

சென்னே 44-வது வட்டம் திரு வள்ளுவர் மன்றத்துக்கான புதிய நிர்வாகிகள் பின்வருமாறு தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர் :—

தலேவர் : ஆ. முருகேசன்; செய லாளர் : பே. மா. சோமசுந்தரம்; துணேசெயலாளர் : இ. சி. ஆரியப்பன்; பொருளாளர் : கா. கிருட்டினன். மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பதுபேர்.

உள்ள தமிழர்கள், இம்மலர்க் குழு உறுப்பினர்களான தி. மு. பொற்கோ, எஸ். தியாகராசன் ஆகியோருடன், 'தீர்ராவிடகம்', தாராவி—பம்பாய்-17' என்ற முக வரிக்கு உடன் தொடர்புகொள்ளும படியும் வங்கத் தமிழர் சங்கத் துணேச் செயலாளர் செ. வீரபத் திரன் அறிவிக்கிறார்.

அரசாங்கக் கணக்குப்படி ஒரு கோடி!

நாட்டு நடப்பு என்னவோ ?

புதுடில்லி, ஜூலே 27—

"மூன்றுவது நிட்டம் முடிவுற்ற நாளில் (31—6—66) இந்தி யாவில் வேலேயில்லாதோரின் எண்ணிக்கை 90 இலட்சம் முதல் ஒரு கோடிவரை இருந் திருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவை யில் கேள்வி ஒன்றுக்குப் பதி லளிக்கப்பட்டிருக்கிறது.

"ஒழுக்கான கணக்குக் கிடைக்க வில்லேயென் றாலும், 1966-67, 1967—68-ம் ஆண்டுகளில் பொருளாதார மந்தம் ஏற்பட்டதன் விளேவாக, வேலே யில்லாதோரின் எண்ணிக்கை மேலும் கூடியிருக்கக்கூடும்" எனவும் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

வேலேயில்லாதோர் தொகை

மெட்ரிக்குலேசன்	1,50,000
இடைநிலே	1,50,000
பட்டதாரி	1,00,000
பட்டதாரி (தொழில்நுட்பம்)	1,00,000
பட்டயம்	1,00,000
பட்டயம் (தொழில்நுட்பம்)	1,00,000
தொழிற்சாலே பயிற்சி	1,00,000
தொழிற்சாலே பயிற்சி (தொழில்நுட்பம்)	1,00,000
தொழிற்பயிற்சி	1,00,000
தொழிற்பயிற்சி (தொழில்நுட்பம்)	1,00,000
தொழிற்பயிற்சி (வணிகம்)	1,00,000
தொழிற்பயிற்சி (வணிகம்-தொழில்நுட்பம்)	1,00,000
பயிற்சி பெறாதோர்	1,00,000
பயிற்சி பெறாதோர் (தொழில்நுட்பம்)	1,00,000
மொத்தம்	90,00,000

நான்கு தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

புதுடில்லி, ஜூலே 29—

நான்கு மத்திய தொழிற்சங்க நிருவனங்களின் உறுப்பினர்களின் எண ணிக்கை (1966 டிசம்பர் 30-ம் நாள் வரையில்) பற்றிய தகவலே, நாடாளுமன்ற மேலவையில், தொழிலாளர் நலத்துறை அமைச் சர் ஓராததி, கேளவி நேரத்தின் போது வெளியிட்டார் :—

இந்தியத் தேசியத் தொழிற்சங் கக் காங்கிரசு—14,05,485.

இந்த் மஜ்தூர் சபர—4,33,015.

அ. இ. தொழிற்சங்கக் காங்கி ரசு—4,32,852.

ஐக்கியத் தொழிற்சங்கக் காங் கிரசு—98,454.

பதவியில் இருந்தபோது சட்டமியற்றத் தயங்கியதேன்?

காங்கிரசாருக்கு அமைச்சர் மாதவன் கேள்வி

'அமைச்சர்களின் சொத்துக் கணக்கைக் கழக அரசு வெளியிடும்' என அறிவிப்பு

"பதவியை இழந்த காங்கிரசுக்காரர்கள், தரம் தாழ்ந்து பேசுகிறார்கள்! தோற்றல் தந்த படிப்பினையை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை!

"'அமைச்சர்கள் சொத்துக் கணக்குக் காட்ட முடியுமா? காட்டத் தயாரா?' என்று கேட்கிறார்கள். 1965-ம் ஆண்டில் நான் சட்டமன்றத்தில் இதற்காக ஒரு மசோதாவே கொண்டுவந்தேன்--அப்போது நான் அமைச்சராக இருக்கவில்லை--அம்மசோதாவில், 'அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்கள் சொத்து விவரக் கணக்கை கொடுக்கவேண்டும்; அப்படிக் கொடுக்காவிட்டால் சிறைத் தண்டனைகூட விதிக்கலாம்' என்று கூறியிருந்தேன்.

"இன்று எதிர்க் கட்சியிலுள்ள காங்கிரசு நண்பர்களைக் கேட்கிறேன்—நீங்கள் இதுபோன்ற மசோதாவைக் கொண்டுவரலாமல்லவா? ஏன் கொண்டுவரவில்லை? முன்பிருந்த அமைச்சர்களின் சொத்துக் கணக்கையும் கேட்பார்களே என்ற பயமா? அதற்காக நாங்கள், 'சொத்துக் கணக்கைக் காட்டமாட்டோம்' என்று சொல்லவில்லை; அமைச்சர்கள் சொத்து விவரத்தை வெளியிடும் திட்டம் ஒன்றை அமைச்சரவை முடிவு செய்து வருத்துள்ளது. இது சம்பந்தமாக அரசாங்க ஆணை விரைவில் வெளியிடப்பட இருக்கிறது; சட்ட ரீதியாக அந்தக் கணக்கைக் கொடுப்போம்"

என்று, சட்டத் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள், அயன்புரத்தில் நடந்த அண்ணா தந்த ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது :—

"'அமைச்சர்களுக்கு-சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சொத்து இருக்கக் கூடாது; சொத்துச் சேர்க்கக்கூடாது' என்பதல்ல இதன் நோக்கம்; 'அந்தச் சொத்துக்களே எப்படிச் சேர்த்தார்கள்—அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்திச் சொத்துச் சேர்த்தார்களா—என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதுதான் இதன் நோக்கம்.

முதலமைச்சரின் சொத்து விவரங்களைக்கூட கணக்கை அவர், 'தலைமையமைச்சர் அல்லது உள்துறை அமைச்சருக்குக் கொடுக்கவேண்டும்' என்று முன்பு இருந்த காங்கிரசு ஆட்சி ஒப்புக்கொண்டதை ஏற்க முடியாது என்று தி.மு.கழக அரசு முடிவு செய்துள்ளது; மத்திய அரசுக்கு இந்த வகையில் அடியணியமாட்டோம்.'

மத்திய அரசு ஊழியர்கட்குக் கைவிரிப்பு

தேவை அடிப்படையில் ஊதியம் வழங்க இயலாதாம்

நடுவர் தீர்ப்புக்கு விடவும் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 27—'தேவை அடிப்படையில் குறைந்த அளவு ஊதியம்' என்ற மத்திய அரசு ஊழியர்களின் கோரிக்கையை நடுவர்கள் தீர்வுக்கு விடுவதான கோரிக்கையை மத்திய அமைச்சகத்தினைக் குழு நிராகரித்துவிட்டது.

நாடு முழுமையிலும் உள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும், 'தேவை அடிப்படையில் குறைந்த அளவு ஊதியம்' என்ற திட்டத்தைச் செயல் படுத்தவதற்கான ஒரு கருவே, தனது ஊழியர்களுக்கும் மேற்படித் திட்டதைச் செயல்படுத்துவது பற்றி ஆராய முடியுமென்றும், மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டுமே அது செயல்படுத்தவது என்பது இயலாத காரணம் என்றும் இதற்குக் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, தோராயமான ஒரு கணக்குப்படி, மத்திய அரசின் 25,00,000 ஊழியர்களுக்கு, 'தேவை அடிப்படையிலான ஊதிய' திட்டம் செயல்படுத்தப் படுமானால், ஆண்டொன்றுக்கு மேலும் ரூ. 120 கோடியிலிருந்து ரூ. 200 கோடி வரை கூடுதலாக மத்திய அரசு செலவு செய்யவேண்டியதும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு ஊழியர் ஒருவர் தற்போது பெறும் ஊதியம் ரூ 135 ஆகும். இதுவர் ஒருவரின் கணக்குப்படி, 'தேவை அடிப்படையிலான ஊதியம்' தரப்படுவதாலுங்கு, இது ரூ. 200 ஆக உயர்த்தப்பட வேண்டியிருக்கும் வேறெருவர், இது ரூ. 175 ஆக இருக்கும என்று கணக்கிட்டிருக்கிறர்.

நோக்கை மறுக்கப்பட்டால்...

"பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ, நடுவர் தீர்ப்புக்கு விடுவதன் மூலமோ பிரச்சினையை தீர்க்க அரசு தயாராகவே இருக்கிறது. திட்ட அமலாக்கத்தில் ஏற்படும் சிக்கல்களை நீக்கவும் அரசு தயாராகவே இருக்கிறது. ஆனால் ஊழியர்கள் தங்கள் நோக்கை மறுக்கப்பட்டால், அதற்கு அரசு பொறுப்பாகாது" என்று மத்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போலீசாரைத் தாக்கிய கூட்டத்தின்மீது துப்பாக்கிச் சூடு

கைதிகளை விடுவிக்க கர்ப்பு-அரிவாருடன் கலவரம்

மதுரை, ஜூலை 28—

போலீசாருக்கும்—ஆத்திரமுற்ற ஒரு கும்பலுக்கும் இடையே நடந்த மோதலில் 5 போலீசார் தம்மைக் காத்துக் கொள்வதற்காக சுடவேண்டியதாயிற்று. இதில் ஒருவர் மடிந்தார்.

பாளையங்கோட்டை அருகே உள்ள சொச்சிகுளம் கிராமத்தில் நேற்று நடைபெற்ற செய்யப்பட்ட இரண்டு ஆட்களை விடுவிக்கும் முயற்சியில் ஒரு கும்பல் ஈடுபட்டது; அக்கும்பல், போலீசாரைத் தாக்கியது.

இக்கலவரத்தில் 3 போலீசார் காயமுற்றனர். போலீசார்மீது கற்களை வீசியும், அரிவாளால் வெட்டியும் கலகம் விளைவித்தனர்.

இரண்டு போலீசுக்காரர்களுக்கு அரிவாள் வெட்டு விழுந்தது என்று சொல்லப்படுகிறது.

நொச்சிகுளத்தில் ஒரு போலீ சுக்காரருக்குச் சொந்தமான நிலத்தைச் சட்டவிரோதமாகப் பயிர் செய்துகொண்டிருந்த நபர்களின் கைது செய்வதற்காக நிலத்துக்குச் சென்ற்கு காரரான போலீசுக் காரர் கொடுத்த புகாரின்மீது போலீசுக் கோஷ்டி கொச்சிகுளத்துக்குச் சென்றது.

அந்தக் குறிப்பிட்ட நபர்களின் கைது செய்து பாளையங்கோட்டைக்கு லாரியில் அழைத்து வரும் வழியில், 500 பேர் கொண்ட ஒரு கும்பல் போலீசுக் கோஷ்டியைக் கல்லாலும், அரிவாள்களாலும் கடுமையாகத் தாக்கியது.

அதன் பிறகே போலீசார் அந்தக் கும்பலீமீது தமமைக காத்துக் கொள்வதற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்; போலீசாரை அரிவாளால் தாக்கவந்த நபர் மாண்டார்.

இந்தக் குமுப்பத்தில் இரண்டு கைதிகளும் தப்பிவிட்டனர்.

போலீசு அதிகாரி திரு. நாராயணன், இதுபற்றி விசாரணை நடத்த திருநெல்வேலிக்குப் பயண மானார்.

ஆகஸ்டு 3, 4 வட்டக் கழகத் தேர்தல்கள்

ஆணையாளர்கட்கு வேண்டுகோள்

ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் வட்டக் கழகத் தேர்தல்களை நடத்திவைக்கத் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர்களாக இருந்து பணியாற்ற மாறு கேட்டுக்கொண்டு அக தந்தத் தேழுர்களுக்கு தலைமைக் கழகத்தின் முடங்கல் அனுப்பப்பட்டுள்ளது.

முடங்கலில் குறிப்பிட்டுள்ள வட்டக் கழகத் தேர்தலின் ஆணையாளராக---வேறு பணிகள் இருந்தாலும் அவைகளை ஒத்தி போட்டு --- ஆகஸ்டு 2, 3, 4 ஆகிய நாட்களுக்குத் தலைமைக் கழக அறிவிப்புக்கு இணங்க பணியாற்றுமாறு தேழுர்களை கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள வட்டக் கழகத் தேர்தல்களை நடத்திவைக்க நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர்கள் விவரம் வருமாறு :—

1.	திரு. ஆ. பொன்னுசாமி
2.	திரு. ஆ. கோ. கிருபாநிதி
3.	திரு. கோ. வீரமணி
4.	திரு. கோ. சி. மணி
5.	திரு. ஆ. கோ. முத்து
6.	திரு. பி. வி. சீனிவாசன்
7.	திரு. மு. சு. மணி
8.	திரு. பி.ஏ., மோ. இரா. வரதராசன்
9.	திரு. க. தியாகராசன்
10.	திரு. க. சாமிதுரை
11.	திரு. கி. சிவசங்கு

வாழ்நூர்

தி. மு. க. சார்பில மாலை 6-30 மணிக்கு; தலைவர் : ந்சையன் ; பேசுவோர் : ப. நாராயணசாமி, கு. பாலகிருட்டினன் எம்.சி., சு. நாராயணசாமி, இரா. தென்னவன், எஸ். ஏ. பக்கிசாமி. (மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

குடியேற்றம்

10-வது வட்ட தி. மு. க. சார் பில் மாலை 6 மணிக்கு, பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றம் அருகில்; தலைவர் : பி. ஜி. இராசன ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மற்றும் பலர்.

கீழ்வழித்துணையாங்குப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மருத்துவமனைக்கு அருகில்; தலைவர் : கு. மாணிக்கம் ; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., பி. சாம்பசிவம், பி. கே. முனுசாமி, கே. பி. மார்க்கபந்து, சீனிவாசமூர்த்தி, கே. வேணு, எஸ். ஆர். இராசகோபால்.

அதிராம்பட்டினம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மழஞ்செட்டித் தெருவில்; தலைவர் : எம். எஸ். எம். அன்சாரி ; பேசுவோர் : டி. கே. சீனிவாசன், என். எஸ். இளங்கோ, எம். ஏ. அப்துல் காதிர், ஏ. அன்சாரி, மற்றும் பலர்.

நடக்க இருப்பவை

30--7--68

நெய்வேலி

அழகிரி நினைவு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர் : ஆ. கோ. கிருபாநிதி ; பேசுவோர் : கோ. வீரமணி, செ. முத்து, பி. வி. சீனிவாசன், மு. சு. மணி பி.ஏ., மோ. இரா. வரதராசன், க. தியாகராசன், க. சாமிதுரை, கி. சிவசங்கு

வாழ்நூர்

தி. மு. க. சார்பில மாலை 6-30 மணிக்கு; தலைவர் : ந்சையன் ; பேசுவோர் : ப. நாராயணசாமி, கு. பாலகிருட்டினன் எம்.சி., சு. நாராயணசாமி, இரா. தென்னவன், எஸ். ஏ. பக்கிசாமி. (மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

குடியேற்றம்

10-வது வட்ட தி. மு. க. சார் பில் மாலை 6 மணிக்கு, பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றம் அருகில்; தலைவர் : பி. ஜி. இராசன ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மற்றும் பலர்.

கீழ்வழித்துணையாங்குப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மருத்துவமனைக்கு அருகில்; தலைவர் : கு. மாணிக்கம் ; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., பி. சாம்பசிவம், பி. கே. முனுசாமி, கே. பி. மார்க்கபந்து, சீனிவாசமூர்த்தி, கே. வேணு, எஸ். ஆர். இராசகோபால்.

அதிராம்பட்டினம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மழஞ்செட்டித் தெருவில்; தலைவர் : எம். எஸ். எம். அன்சாரி ; பேசுவோர் : டி. கே. சீனிவாசன், என். எஸ். இளங்கோ, எம். ஏ. அப்துல் காதிர், ஏ. அன்சாரி, மற்றும் பலர்.

தஞ்சை மாவட்ட விவசாயக் கருத்தரங்கு

முதலமைச்சர் அண்ணா துவக்கி வைப்பார்

தஞ்சை, ஜூலை 28—

தஞ்சை மாவட்ட விவசாயக் கருத்தரங்கு ஜூலை 31, ஆகஸ்டு 1 ஆகிய நாட்களில் தஞ்சையில் நடைபெறும்.

ஜூலை 31-ம் நாளன்று முன் னோட்ட விவாதம் நடைபெறும்.

ஆக. 1-ம் நாளன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், கருத்தரங்கைத் துவக்கிவைப்பார்.

அறிஞர் அண்ணா

சுற்றுப்பயணம்

ஜூலை 30 காலை 9-மணி : ஸ்ரீரெங்கநகராட்சி வரவேற்பு; நகராட்சி மன்றத் தலைக் கட்டிடத் திறப்பு; காலை 10-மணி : கோபி —அசினார் கலைக் கல்லூரித் திறப்பு விழா; இயங்கும் நூலகத் துவக்க விழா; வீட்டு மனைப் பட்டா வழங்கல்; ஜாராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 8-மணி : பொதுக்கூட்டம்; இரவு 9-மணி : ஸ்ரீரெங்கம் பொதுக்கூட்டம்.

ஜூலை 31 : திருச்சி.

ஆகஸ்டு 1 காலை 10-மணி : தஞ்சாவூர் வேளாண்மைக் கருத்தரங்கில் பங்கேற்பு; மாலை 5-30 மணி : தஞ்சாவூர் பால் வழங்கு சங்கத்தின் கால்நடைப் பண்ணைத் திறப்பு விழா.

திண்டிவனம் நகர தி. மு. க. கீழை தேர்தல்

ஒத்திவைக்கப்படுகிறது

30-7-68 அன்று காலை நடைபெறுவதாக இருந்த திண்டிவனம் நகர தி. மு. க. கிளைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தமிழக மின்சார வாரியம்

K 2-காண்டிராக்ட்

குறிப்பு எண் : K. C. 137

டெண்டர் பெட்டின் விலை ரூ. 10.30

தமிழக மின்சார வாரியம்—கோவையாறு நீர் மின் திட்டம்—Power House I—IV Stage Substructure Concreting of Power House I near Lower Camp—ஸ்பெசிபிகேஷன் No. K. C. 137

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பு கண்டபடி அதனுடைய முகவரையில் எழுதப்பட்டு முத்திரையிட்ட டெண்டர்கள், மேடு கையொப்பமிடுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 21—8—1968 அன்று மாலை 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் பிற்பகல் 4.00 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன்னால் திறக்கப்படும்.

டெண்டர் செடுகளின் நகலினை (மூற்றத்தக்கதல்) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்டுள்ளபடி ரூ 10.30 (ரூ. பத்தும் மற்றும் பைசா மூப்பது மட்டும்)—(விறபனை வரி உட்பட) செலுத்தி, மேடு கையொப்பமிடுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். முத்தொகையானது எந்தச் சந்தர்ப்பத்திலும் திரும்பித் தர மாட்டாது. டெண்டர் செட்டுகள் விற்பனைக்கு வைக்கப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான மொத்த தொகை ரூ. 5,000 (ஐந்தாயிரம் ரூபாய மட்டும்) மேடு ஒப்பமிடுள்ளவரின் அலுவலகத்தில் முன்னதாகச் செலுத்தி அதற்கான செலுத்து சீட்டை டெண்டர் நகலுடன் இணைக்கப்பட வேண்டும். எக் காரணத்தை முன்னிட்டும் செக்குகள் (Cheques) ஏற்கப்படமாட்டா.

வாரியத்தினரால் குறிப்பிடுள்ள மறு பாரத்திலி இல்லாத டெண்டர்கள் அல்லது இறுதி நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். மேடு ஒப்பமிடுள்ளவருக்கு வேலைகளில் எவ்வு எல்லா டெண்டர் தார்களுக்கும் பகிர்வு வழக்கவும் அல்லது லை எல்லா டெண்டர்களையும் ஏற் றுக்கொள்ளவோ, காரணம் சொல்லாமல் மறுக்கவோ உரிமையுண்டு.

தமால் போக்குவரத்தில் ஏற்படும் தாம தத்திற்கும், காலமும் மிகாமல் எந்த டெண்டர் செட்டுகும் மின்சார வாரிய பொறுப்பாளியாகாது.

மேற்பார்வை பொறியாளர்

கோதையாறு நீர்மின் நிட்டம்

கோதையாறு, நெய்முகம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்

கரூர் நகர தி. மு. க. கீழை தேர்தல்

ஆணையாளர் :

சா. கணேசன் எம்.சி.

ஏற்கனவே அறிவித்துள்ளபடி கரூர் நகர தி. மு. க. கிளை தேர்தல், 30-7-68 செவ்வாய் காலை 10 மணிக்கு கரூர் டாக்கி-டாக் தியேட்டரில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தேழுர் சா. கணேசன் எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அழகாபுரி தி.மு.க. கீழை மறு தேர்தல்

"அருப்புக்கோட்டை வட்டம் அழகாபுரி தி. மு. க. கிளையின் மறு தேர்தல் 30-7-68 அன்று தேழுர் கு. திருஞானம் எம்.எல்.சி. அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்"

என இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தென்னரசு அறிவிக்கிறார்.

என். வி. என். செல்வம்

நிகழ்ச்சிகள்

ஜூலை 31 : சென்னை 22-வது வட்டம்; ஆக. 3, 4 : புதுவை மாநிலம்; 11 : சென்னை 42-வது வட்டம்.

திரைவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களால் ஆயிரவாகம், வெளியீடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-31) அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.